**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் 09-ம் நாள் சனிக்கிழமை

***<u>இ.ம.எண். 320/2020 in அசல் வழக்கு எண்: 297/2015</u>***

1. கலைச்செல்வி
2. கலைவாணன் ....மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. சாரதாம்பாள
2. நிர்மலா … எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 08.01.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.அன்பழகன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் உத்தரவு.

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 7 விதி 14-ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தனது தரப்பு சாட்சியாக தனது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்கள் ஒளிநகல் ஆவணங்கள் என்றும் அதற்கு பதிலாக சான்றளிக்கப்பட்ட நகல்களை தான் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று இத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும், அதன் காரணமாக மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் ஆகிவிட்டது என்றும், அந்த வகையில்

ஏற்பட்ட காலதாமதம் தான் வேண்டும் என்றோ அலட்சியத்தாலோ ஏற்பட்டதல்ல என்றும் தனக்கு மேற்படி வழக்கில் கூடிவரக்கூடிய நல்ல கட்சி உள்ளது என்றும் தனது கட்சியை நிரூபணம் செய்ய இத்துடன் உள்ள ஆவணங்கள் மிகவும் அத்தியாவசியமானதாகும் என்றும், இல்லையேல் தனக்கு அளப்பரிய கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்:</u>**

எதிர்மனுதாரர் தங்களது எதிருரையில், மனுதாரர் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள கோரி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டிய மனு என்றும், மனுதாரர் தனது அபிடவிட்டில் சொல்லியுள்ள செய்திகள் அனைத்தும் சரியானதல்ல என்றும், மேற்படி சங்கதிகளை நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் கடமையாகும் என்றும், உண்மையில் இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தமும் தொடர்பும் இல்லாத ஆவணங்களாகும் என்றும் அந்த ஆவணங்களை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மையான சரியான ஆவணங்கள் கிடையாது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடிக்குரியது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு இந்த எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

**5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6. மனுவினை பொறுத்தவரையில் அசல் வழக்கில் வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் இந்த மனுவிற்கு ஆட்சேபனை செய்திருந்தாலும் இந்த மனுவில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்புக்கு தேவையான அவசியமான ஆவணங்களாகும் என்றும், வழக்கில் கூடிவரக்கூடிய நல்ல கட்சி மனுதாரருக்கு உள்ளது என்றும் தனது கட்சியை நிரூபணம் செய்ய இத்துடன் உள்ள ஆவணங்கள் மிகவும் அத்தியாவசியமானதாகும் அவ்வாறில்லையென்றால்

மனுதாரருக்கு அளப்பரிய கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என கூறும் காரணத்தை கருத்திற்கொண்டும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மைதன்மை தொடர்புடமை நிருபண தன்மை ஆகியவை குறித்து இம்மனுவில் முடிவு செய்ய இயலாது என்றும் வழக்கு விசாரணையிலேயே முடிவு செய்ய இயலும் என்பதாலும், மேலும், வாதிகளுக்கு உரிய வாய்ப்பினை வழங்க வேண்டும் என்றும் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, மனுதாரர்கள் தாக்கல் செய்த இந்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 2021 ஜனவரி மாதம் 09ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.